**கம்பஹா மாநகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 08 இல் சபையின் முதல்வருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா மாநகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானக்கூற்று ரூபா 24,915,436 செலவிலும் கூடிய வருமானம் பொதுநாட்குறிப்பேடு இல 55 இன் பிரகாரம் செலவிலும் கூடிய வருமானம் அல்லது வரவிலும் கூடிய செலவினம் கணக்கிற்கு ரூபா 25,267,388 பெறுமதியில் மாற்றியமையால் ரூபா 351,952 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மூலதனச் சொத்திற்கான வருமானத்தின் பங்களிப்பு, மூலதன சொத்திற்கான மானியத்தின் பங்களிப்பு மற்றும் சொத்துக்களை ஈடாக வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் ஆகிய கணக்குகளின் கூட்டு மொத்ததொகை ரூபா 236,519,293 உள்ள போதிலும் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 240,505,250 ஆக உள்ளதனால் கணக்குகளில் ரூபா 3,985,957 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) கடந்த வருட கணக்காய்வு அறிக்கையின் கணக்கீட்டு குறைபாட்டில் உள்ள முற்கூட்டியே கிடைக்கப்பட்ட செலவு மிதி ரூபா 316,729 நிதிக்கூற்றுக்களில் களஞ்சிய சென்மதியாளர் (வரவு) மீதியாக முற்கூட்டியே பெற்ற முற்பணமாக காட்டப்பட்டதனால் ஏற்பட்ட தவறை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் சபைக்கு நன்கொடையாக கிடைத்த 6 வாகனங்களிற்கு பெறுமதியை நன்கொடையளித்தவர்களின் பெறுமதியை வாங்கியோ அல்லது புதிய விலை மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்கீடு செய்யப்படவோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுமொத்த தொகையான 7,216,259 பெறுமதியான நடவெடிக்கைகளுக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் முறையாக கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா. 35,243,249 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா. 41,080,544 ஆக விளைந்திருந்தது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

(அ) 2008 ஆம் ஆண்டில் கிடைத்த மறுக்கப்பட்ட இரு காசோலை ரூபா 4,527 பெறுமதியானவை 2015 திசெம்பர் 31 திகதி வரைக்கும் முற்கூட்டியே பெற்றுக்கொண்ட கணக்குகளில் காணப்பட்ட போதும் அது அறவிடப்பட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஆ) (1007 பழைய சநிழசவ) 1007ற்கு தவணைக்கட்டணம் செலுத்தும் போது 2015 யூன் 11 ஆந் திகதியில் வழங்கப்பட்ட ரூபா 172,375 பெறுமதியான காசோலை காணாமல் போனமை பற்றி நிதிப்பிரமானம் 392(அ) iiஇ iii இன் பிரகாரம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் வருமாறு.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000’ | உண்மை (ரூபா) 000’ | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000’ |
|---|---|---|---|
| ஆதனவரி | 53,521 | 49,079 | 36,442 |
| வாடகைகள் | 3,196 | 3,065 | 1,097 |
| உரிமங்கள் | 2,035 | 2,018 | 276 |
| ஏனைய வருமானம் | 316,471 | 310,579 | 170,276 |

மீளாய்வாண்டில் ஆரம்ப கிடைக்க வேண்டிய மீதியுடன் ஒப்பீடு செய்யும் போது வருட முடிவில் கிடைக்கவேண்டிய மீதியின் 5 வீதம் கூடுதலாக காணப்பட்டபோதிலும் கிடைக்கவேண்டிய வருமானம் அறவிடுவதற்கு திருப்திகரமான அளவில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

#### 2.3.2 ஆதனவரி

(அ) யக்கல உப அலுவலக எல்லையில் உள்ள 2006 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஆதனவரி விலை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 21,990,184 கிடைக்கவேண்டிய ஆதனவரிக்குள்1-3 ஆண்டுகளுக்கான ரூபா 5,978.332 பெறுமதியான நிலுவையும் 3-5 ஆண்டுகளுக்கான ரூபா 3,719.430 பெறுமதியான நிலுவையும் 5 ஆண்டுக்கு மேலாக ரூபா 1,724,961 உம் உள்ளன.

### 2.3.3 வியாபார வரி

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்குள் ரூபா 1,100,588 பெறுமதியான கிடைக்கவேண்டிய வியாபாரவரி நிலுவையினுள் 230 கடைகளில் அறவிடவேண்டிய 5 ஆண்டுகளிற்கு மேலாக உள்ள ரூபா 221,350 உம், 3-5 ஆண்டுகளுக்கு ரூபா 135,000 உம், 1-3 ஆண்டுகளுக்கு ரூபா 58,200 உம் உள்ளன.

### 2.3.4 கடை வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன

(அ) வாடகை ஒப்பந்தத்தின் நிபந்தனையின் பிரகாரம் கடையினை பெறுவோறுக்கு கொடுப்பதற்கும், ஈடு வைப்பதற்கும், மீள கடையை வேறு நபருக்கு வழங்கவும் மற்றும் வேறு நபருடன் இணைந்து வியாபாரம் நடத்துவதற்கும் தடை காணப்பட்டபோதிலும் அந் நிபந்தனைக்கு எதிராக அதிகமான கடையை பெற்றக்கொண்டோர் வேறு நபர்களுக்க மீள வாடகைக்கு வழங்கியுள்ளமையை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பொதுச்சந்தை தொகுதியில் உள்ள கடையை பெற்ற வியாபாரிகளின் 15 கடைகள் 2008 மே 29ஆம் திகதியில் இருந்து மூடப்பட்டிருந்தது. இவ்வாறு மூடப்பட்டுள்ள கடையை பெற்றுக்கொண்டோருக்கு எதிராக சபையினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது சம்மந்தமாக வருமான பரிசோதகர் மற்றும் வருமான கட்டுப்பாட்டாளர் இருவரினாலும் சபைக்கு இது பற்றி அறிக்கையிடப்படவில்லை.

(இ) 2008 ஆகஸ்ட் 1ல் இருந்து 2015 டிசம்பர் 31 திகதி வரைக்குமான காலப்பகுதியில் உள்ள நகர அபிவிருத்தி திட்டத்தில் 51 கடைகளில் அறவிட வேண்டிய, கிடைக்கவேண்டிய ரூபா 8,566,200 நிலுவை உள்ளது.

### 2.3.5 மீன் சந்தை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன

**(அ)** 2011 ஆகஸ்ட் 8ம் திகதியில் வருடாந்த பொதுக் கூட்டத்தின் பிரகாரம் சில்லறை, மொத்த வியாபார தொகுதியில் 10 கடைகள் 2016 மார்ச் 18ம் திகதி வரைக்கும் கடை உரிமையாளருக்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த 10 மீன் கடைகளில் 7 மீன் கடைகள் பயன்படுத்தப்படாது காணப்பட்டிருந்த போதும் வாடகைக்கு வழங்கிய கடைகளில் கிடைக்கவேண்டிய வாடகைத் தொகை அறவிடப்படாமல் காணப்பட்டது.

(இ) மீன் வியாபாரம் செய்வதற்கு நகரசபையில் அனுமதி பெற்ற நிரந்தர கடை வியாபாரிகள் காணப்பட்டபோதிலும் நடைபாதையில் 5 மீன் கடைகளில் மீன் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அவர்களிடம் நாளாந்த கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் கடைகளில் உள்ள வியாபாரிகளின் வியாபாரம் குறைவடைந்தும் நுகர்வோருக்கு சுகாதாரமற்ற மீன் பெறுவதற்கான வாய்ப்பு, சுற்றாடல் மாசுபடுதல், வீதி நெருக்கடி அதிகரிப்பு ஆகிய பிரச்சினைகள் காணப்பட்டிருந்த போதிலும் அதனை கட்டுப்படுத்த சரியான படிமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொத்த, சில்லறை சந்தைத் தொகுதியில் உள்ள கடைகள், 10 மீன் கடைகள் வியாபாரிகளுக்கு கொடுப்பதற்கு 2011 ஆகஸ்ட் 8ம் திகதியில் ஆண்டு பொதுக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் எடுத்திருந்த போதிலும் இதுவரைக்கும் சட்ட உடன்படிக்கை 09 மீன் கடை வியாபாரங்களுக்கு மேற்கொள்ளப்படவில்லை. பொதுச்சந்தை தொகுதியில் இலக்கம் 31 மீன் கடை மட்டும் 2012 எப்ரல் 01 ஆம் திகதியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

(உ) 2012 வருடத்தில் இருந்து இலக்கம் 31, 36, 37 ஆகிய 3 மீன் கடையில் கிடைக்கவேண்டிய வாடகை நிலுவை ரூபா 503,625 உள்ளன.

(ஊ) மீன் சந்தை யு மற்றும் டீ பகுதியில் உள்ள 20 அப்புறப்படுத்தப்பட்ட கடைகளில் அறவிடவேண்டிய தொகை முறையே ரூபா 215,000 ரூபா 100,100 உம் காணப்பட்டுள்ளது.

### 2.3.6 வியாபார உரிமங்கள்

-------------------------------------

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 277,375 உள்ள வியாபார உரிமை நிலுவையில் 64 வியாபார அலகுகளுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 105,985 2003 ஆம் ஆண்டில் இருந்து கொண்டுவந்த நிலுவையாக காட்டப்பட்டுள்ளது.

### 2.3.7 ஏனைய வருமானம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன

(அ) வருமான நிர்வாகம் இருந்த போதிலும் மாநகர சபைக்கு அதிகளவான வருமானம் பெற்றுக்கொள்ள கூடியதுமான தொலைத் தொடர்பு கோபுரம் சம்மந்தமாக ஆராட்சி செய்யப்படாமையினால் கோபுரங்களினால் கிடைக்கவேண்டிய வருமானம் சபைக்கு கிடைக்கப்பட்டிருக்கவில்லை 3 கோபுரங்களில் மட்டும் ரூபா 919,657 கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1989 ஜனவரி 20ம் திகதியில் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் விசேட வார்த்தமானியின் iv (ஆ) பிரிவின் பிரகாரம் தீயணைப்பு சேவையின் உப சட்டத்தின் ை ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அபாயம் மற்றும் இரைச்சல் தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபாரங்களிற்கு வருடாந்த வியாபார அனுமதிப் பத்திரங்களிற்கு மேலாக தீ தொடர்பான அனுமதி எடுப்பதற்கும் அதற்கு மேலாக இடர்மட்டம் வியாபார வழங்கும் சேவையின் தன்மையையும் கவனத்திற் கொண்டு அதிகளவான ரூபா 5000 க்கு மேலதிக கட்டணம் அறவிடுவதற்கு பொருத்தமானது என சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வகையான 116 வியாபார நிலையங்களின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 232,420 கட்டணம் அறவிடப்பட்டு தீ தொடர்பான அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 3.1 சொத்து முகாமைத்துவம்

---------------------------------------------

**விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------

இலக்கம் இல்லாத உழவு இயந்திர பெட்டி 3 உம் மற்றும் ரூபா 203,600 புத்தக பெறுமதியுடைய 2 குவோட்டா லான்மாஸ்ரரும் 8 ஆண்டுகளுக்கு மேலாக திருத்துவதற்கும் பயன்பாட்டிற்கும் முடியாதிருந்த போதிலும் 2015 இருப்பு கணக்கெடுப்பில் இது தொடர்பாக ஏல விற்பனை செய்ய தீர்மானம் எடுத்திருந்த போதிலும் 2016 மே 28ம் திகதி வரைக்கும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

----------------------------

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மாநகர சபைக்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களிற்கு ரூபா 119,922,003 ஒதுக்கீட்டு தொகை கிடைத்திருந்த போதிலும் 341 நிகழ்ச்சித் திட்டங்கள் செய்யவேண்டியிருந்தது. அத்திகதிக்கு 187 நிகழ்ச்சித்திட்டங்கள் முடிவடைந்திருந்த போதிலும் 6 நிகழ்ச்சி திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டில் கிடைத்த 87 நிகழ்ச்சித்திட்டங்களின் 16 நிகழ்ச்சித்திட்டங்களிற்கு மதிப்பீடு செய்திருந்த போதிலும் அதில் 4 திட்டங்களிற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்தது. ரூபா 667,929 பெறுமதியான 4 வீதிக்கான அபிவிருத்தி செய்வதற்காக 2015 மே மாதத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 7 மாதம் கடந்துள்ள போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் அவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியின் செய்யும் வேலைத்திட்டங்களிற்காக ஒதுக்கீடு செய்த 211 வேலைத்திட்டத்தில் 100 வேலைத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்திருந்தபோதிலும் பாதீடு ஒதுக்கீடு வரையறை

இல்லாது காணப்படாததால் ஒப்பந்தம் 25 நிகழ்ச்சித்திட்டத்திற்கு மட்டுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

### 3.3 யக்கல சந்தை கட்டட நிர்மாணம்

யக்கல சந்தை நிர்மானத்திற்காக 2002 ஏப்ரல் 4ம் திகதியில் இருந்து வங்கி நிலையியல் கட்டளையின்படி கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 4,855,000 கடன் கிடைத்திருந்தது. 2014 ஆம் ஆண்டில் அக்கடன் தொகையினை பயன்படுத்தி நிர்மாணம் செய்த சந்தை கட்டடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் முழுவதுமாக உடைத்து அப்புறப்படுத்தி வேறுதிட்டத்தில் நிர்மானம் செய்து மாநகர சபைக்கு கொடுத்திருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் 2015 திசெம்பர் 31ம் திகதி வரைக்கும் இவ் கடன் தொகைக்காக மாநகர சபையினால் கடன் தவணைக்கட்டணம் ரூபா 4,855,000 உம் வட்டித்தொகை ரூபா 1,949,145 உம் கொடுப்பனவு செய்திருந்தது. இக் கடன் தொகை மற்றும் வட்டிக்காக கொடுப்பனவு செய்த ரூபா 6,804,145 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் உடைத்து அப்புறப்படுத்தியமையினால் அத்தொகை சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டிருந்தது.

### 3.4 செயற்பாட்டு முகாமைத்துவ செயற்திறனின்மை

2002 பெப்ரவரி 15 ஆம் திகதியில் வர்த்தகமானி அறிவித்தலின் பிரகாரம் கம்பஹா மாநகர சபைக்கு சொந்தமான வீதிகள் வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டு வீதிப் பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்கவேண்டியிருந்தபோதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரைக்கும் வீதிப் பதிவேடு பதிவு செய்யப்படாமல் இருந்தது. 2015 திசெம்பர் 31 கணக்காய்வுத் திகதி வரைக்கும் வீதிப் பதிவேட்டில் 1646 வீதிகள் மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது. கடந்த 3 ஆண்டு காலப்பகுதியில் இருந்து நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் இப் பதிவேட்டிற்கு பதிவு செய்யப்படாமல் இருந்தது.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

2015 யூலை 13ஆம் திகதியில் உறுப்பினர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மான அறிவித்தலின் பிரகாரம் திண்மக்கழிவு முகாமைத்துவம் சபையில் தொழிநுட்ப அறிவு மற்றும் அறிவித்தலின்படி மலங்கள் சுத்திகரிப்பு செய்வதற்காக நல்ல நிலைக் காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்வது நல்லது எனவும் இவ் மலங்கள் இறுதியில் வெளியேற்றுவதற்காக வேறு காணி கொள்வனவு செய்து அதில் எரிப்பதற்கான இயந்திரம் ஒன்று பொருத்துவதற்கும் நல்லது என சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 மே 28ஆந் திகதி வரைக்கும் அதற்காக சபை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மலங்கள் வெளியெடுப்பதற்காதக மிளாய்வாண்டில் ரூபா 11,308,100 மாநகரசபை செலவு செய்திருந்தது.

### 3.6 செயற்திட்டத் தாமதம்

2008 திசெம்பர் 22ஆம் திகதியில் யக்கல, கிருந்திவல வீதிக்கு அருகில் 102 கடைகள் உள்ள சந்தைத் தொகுதி அமைப்பதற்காக தனியார் ஒப்பந்தக் கம்பனியுடன் ரூபா 122,655,339 க்கு 09 மாதங்களுக்காக ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்த போதிலும் வேலை முடிவடையாது 07 வருடங்கள் கடந்துள்ளன. 2009 ஏப்ரல் 9 ஆம் திகதியிலிருந்து 2015 ஏப்ரல் 7ம் திகதி வரைக்கும் 10 தடவைகளில் ரூபா 66.3 மில்லியன் தொகை ஒப்பந்த கம்பனிக்கு கொடுப்பனவு செய்திருந்தது. கணக்காய்வுத் திகதி 2016 பெப்ரவரி 16ம் திகதி வரைக்கும் சந்தை தொகுதியின் 41 கடைகள் நிர்மாணம் செய்யப்பட்டிருந்த போதிலும் இத்திட்டத்தில் இதுவரைக்கும் எந்தவிதமான நன்மையும் கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) உள்ளக கணக்காய்வு

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

(உ) வருமான நிர்வாகம்

(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(எ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

(ஏ) இருப்புக் கட்டுப்பாடு